# பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி செயல்பாடுகள் (6 முதல் 19 வயது வரை)

## திட்டக்கூறின் தலைப்பு:

பள்ளி செல்லா / இடைநின்ற / இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி செயல்பாடுகள் ( 6 முதல் 19 வயது)

**முன்னுரை:**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009–ன்படி அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியினை முடிப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்தல் என்பது 100 சதவீதம் சேர்க்கை, தக்க வைத்தல் மற்றும் எட்டாம் வகுப்பை முடிப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

தற்பொழுது தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக இடைநிற்றல் விகிதத்தை குறைப்பதற்காக பள்ளி வயதுக் குழந்தைகளை 100 சதவீதம் (1 முதல் 12 வகுப்பு வரை) பள்ளி சேர்க்கையை உறுதி செய்வதற்கு பல்வேறு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## செயல்பாடுகள்:

## மாணாக்கர்களை பள்ளிகளில் தக்க வைப்பதற்கான உத்திகள்

விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் சேர்க்கை பேரணிகளை கிராம, ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில் பொது மக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடைய உதவியுடன் நடத்தி அந்தந்த குடியிருப்பு பகுதிகளில் உள்ள இடைநின்ற மாணவர்களை கண்டறிந்து 1 முதல் 12 வகுப்பு வரை 100 சதவீத சேர்க்கை உறுதி செய்யப்படுகிறது.

## பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிவதற்கான வீடு வாரியான கணக்கெடுப்பு பணி

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 6 முதல் 19 வயதுடைய பள்ளி செல்லா / இடைநின்ற குழந்தைகள், மாற்றுத் திறனுடைய

குழந்தைகள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளை கண்டறிய சிறப்புக் கணக்கெடுப்பு பணி மூன்று முறை (ஏப்ரல்–மே, அக்டோபர் மற்றும் ஜனவரி) மாதங்களில் நடத்தப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக 2021–22–ம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு பணி 10.08.2021 முதல் 15.10.2021 வரை கொரோனா பெருந்தொற்று வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அனைத்து குடியிருப்புகளிலும் நடத்தப்பட்டது.

2020–2021 ஆம் ஆண்டில் சிறப்புப் பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட பள்ளி செல்லா குழந்தைகளின் விவரம் பின்வருமாறு.

| Year | ARS | Direct Enrolment | Home Based | IE - NRSTC | KGBV | NCLP | NRSTC LT (fresh) | NRSTC ST | RSTC (Existing) | RSTC (Fresh) | NRSTC for Seasonal Migrant Children | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2020-21 | 257 | 9867 | 929 | 7764 | 1403 | 2046 | 5098 | 198 | 1638 | 1109 | 3282 | 33591 |

2021–22 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு பணிக்காக புதியதாக செயலி (survey app) உருவாக்கப்பட்டு EMIS தளத்தில் இணைக்கப்பட்டுள்ளது. common pool–ல் உள்ள குழந்தைகளின் உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து, அதில் இடைநின்ற குழந்தைகள் மற்றும் Migrated to other districts category விவரங்களை சம்மந்தப்பட்ட மாவட்டத்திற்கு பெயர்பட்டியல் அனுப்பி அக்குழந்தைகள் தொடர்ந்து பயின்று வருகிறார்களா என்பதை அறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இடைநின்ற மாணவர்கள் இருப்பின் அவர்களை உடனடியாக பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கணக்கெடுப்பு பணி சார்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் "முன் திட்டமிடல் கூட்டம்" (Pre–planning meeting for survey) நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலர் (DEO), மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (IE, OSC and MDO), மற்றும் பிறதுறை சார்ந்த அலுவலர்கள் (Labour, DISH (Directorate of Industrial Safety & Health), Child Line, ICDS, DCPO, DRDA, Police Department, Health and Welfare Departments வாழ்ந்து காட்டுவோம் திட்ட தன்னார்வலர்கள், NGO மற்றும் DDAWO அலுவலர்) என துறைக்கு ஒருவர் வீதம் இக்கூட்டத்தில் பங்கேற்க செய்து, கணக்கெடுப்பு நடத்துவதன் நோக்கம், கண்டறியப்பட்டவுடன் சேர்க்கை / சிறப்பு பயிற்சி செயல்பாடுகள், பிற துறை

அலுவலர்கள் இணைந்து ஆய்வு செய்ய வேண்டிய குடியிருப்பு பகுதிகள் ஆகியன குறித்து விவாதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கணக்கெடுப்பு குறித்த விவரங்களை ஊடகங்கள் வாயிலாக உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள், FM ரேடியோ, திரையரங்குகளில் விளம்பரம், பத்திரிக்கைகளில் செய்தி போன்றவை மூலமாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராம அளவில் கிராம நிரூவாக அலுவலர் மூலமாக தெருக்களில் "தண்டோரா" மூலம் இடைநின்ற குழந்தைகளுக்கு அரசு வழங்கும் சலுகைகளை எடுத்துக் கூறி அப்பகுதியில் பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் இருந்தால் உடனடியாக பள்ளிகளில் சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பணியினை அனைத்து மாவட்டங்களிலுள்ள ஆசிரியப் பயிற்றுநர்கள் / கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (EDC) / பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் / அங்கன்வாடி பணியாளர்கள் / கல்வி தன்னார்வலர்கள் / சிறப்புப் பயிற்றுநர்கள் / இயன்முறைப் பயிற்சியாளர்கள் (Physiotherapist) / பகல் நேரப் பாதுகாப்பு மையப் பாதுகாவலர்கள்/ பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் / தொடர்புடைய பிறதுறை அலுவலர்கள் இணைந்து கணக்கெடுப்பு மற்றும் ஆரம்பக் கல்விப் பதிவேடு புதுப்பித்தல் பணி நடத்தப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகள், செங்கல் சூளை, அரிசி ஆலை, கல்–குவாரி, மணல்–குவாரி, தொழிற்சாலைகள் மற்றும் விவசாயம் போன்றவற்றில் பணிபுரிய பல்வேறு மாநிலங்களிலிருந்து / மாவட்டத்திலிருந்து (Inter and Intra State) தொழில் நிமித்தமாக தமிழகத்திற்கு வருகின்றனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் கண்டறியப்பட்டு வயதுக்கேற்ற வகுப்பில் அருகாமையில் உள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு குழந்தைகளை தொடர்ந்து பள்ளிக்கு அனுப்ப வழிவகை செய்யப்படுகிறது. சமுதாயம் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குழந்தைகளின் 100 சதவீத சேர்க்கை உறுதி செய்யப்படுகிறது.

குழந்தை தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக கணக்கெடுப்பு நடத்தும்போது தொழிற்சாலை, மார்க்கெட் பகுதிகளில் குழந்தை தொழிலாளர் நலத்துறை (Labour Department), DISH (Directorate of Industrial Safety and Health), Child

Line, மாவட்ட குழந்தை பாதுகாப்பு துறை (Social Defence) அலுவலர் மற்றும் காவல் துறையுடன் இணைந்து ஆய்வு நடத்தப்படுகிறது.

கண்டறியப்பட்ட அனைத்து பள்ளி செல்லா குழந்தைகளுக்கும் அரசின் விலையில்லாப் பொருட்கள் (பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப்பை, சீருடை மற்றும் மதிய உணவு) வழங்கப்படுகிறது. மேலும் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் மற்றும் குழந்தைகளிடையே கல்வி தொலைக்காட்சி ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது.

| | |
|---|---|
|  |  |
| விழாக்காலங்களில் பள்ளி செல்லாக் குழந்தைகளை கண்டறியும் பணியில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சேலம் மாவட்டம். | பள்ளி செல்லாக் குழந்தைகளை கண்டறியும் பணியில் ஆசிரியர் பயிற்றுநர்கள் கோட்டைமேடு, நங்கவல்லி ஒன்றியம். |
|  |  |
| விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ள பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறியும் பணியில் ஆசிரியர் பயிற்றுநர்கள் வட்டார வள மையம், பனைமரத்துப்பட்டி | கணக்கெடுப்பு மூலம் கண்டறியப்பட்ட மாணவியை ஊ.ஒ.ந.பள்ளி, காவேரிபுரம் கொளத்தூர் பள்ளியில் சேர்த்தல். |






பள்ளி செல்லா க்குழந்தைகள் கணக்கெடுப்பு பணி, நீலகிரி மாவட்டம்

பள்ளி செல்லாக் குழந்தைகள் கணக்கெடுப்பு பணி, திருவள்ளூர் மாவட்டம்

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

1. கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி பள்ளி செல்லாக் குழந்தைகள் நேரடியாகப் பள்ளியிலோ அல்லது சிறப்புப் பயிற்சி மையங்களிலோ வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்படுவதன் மூலம் தொடர்ச்சியாக கல்வி பெறுவது உறுதி செய்யப்படுகிறது.
2. கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வின் காரணமாக குழந்தைகளின் வாழ்க்கைத் தரம் மற்றும் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது.
3. வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணிதச் செயல்பாடுகளில் மாணவர்களின் முன்னேற்றம் அவர்களுக்கு கல்வியின் மீதான தன்னம்பிக்கையை அதிகப்படுத்துகிறது.
4. பள்ளியை விட்டு இடைநிற்க வாய்ப்புள்ள குழந்தைகளின் மீது தனிக்கவனம் செலுத்தி அவர்களின் வருகை மற்றும் கற்றல் அடைவு தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**முக்கிய அடைவுகள்:**

கொரோனா பெருந்தோற்று காலத்தில் கணக்கெடுப்பு செயலி மூலம் வீடு வாரியான கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டு 1,36,829 பள்ளி செல்லா குழந்தைகள் 1 முதல் 12ம் வகுப்பு வரை மீளப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**நிதி விவரம்:**

பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி செயல்பாடு நிதித் தலைப்பின்கீழ் 2021–22–ஆம் ஆண்டிற்கு தொடக்க நிலையில் 17,493 குழந்தைகளும், 757.95 இலட்சம் இடைநிலையில் 5584 குழந்தைகளுக்கு ரூ.111.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயனாளிகள் :**

சமுதாயத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் குழந்தைகள், வறுமை கோட்டிற்குகீழ் உள்ளோர், நாடோடிகள் குழந்தைகள், புதிய அரசு குடியிருப்புவாசிகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் நகர்புற வீதிகளில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.